10.03.2026.

STC.624/2025

அ.சா.2 சக்கரவர்த்தி, த/பெ.முனுசாமி.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

வழக்கின் புகார்தாரர் எனக்கு உறவினர் என்றால் சரிதான். புகார்தாரர் நடத்திய டி.வி.சி.வழக்கு பற்றி முழு விவரமும் எனக்கு தெரியும். மேற்படி தீர்ப்பின்படி எதிரி சீர்வரிசை பொருட்களை எங்களிடம் ஒப்படைக்க கொண்டுவந்தாரா என்றால் கொண்டுவந்தார். ஆனால் அது பழுதடைந்து இருந்தது அதனால் புகார்தாரர் பெற்றுக்கொள்ளவில்லை. திருமணத்திற்கு கொடுத்த சீர்வரிசை பொருட்கள் கொடுத்து எத்தனை ஆண்டுகள் இருக்கும் என்றால் 8 ஆண்டுகள் இருக்கும். புகார்தாரரும் எதிரியும் எத்தனை ஆண்டுகள் ஒன்றாக குடும்பம் நடத்தினார்கள என்றால் சுமார் 3 மாதங்கள். மேற்படி 3 மாத காலத்தில் நான் புகார்தாரர் வீட்டிற்கு சென்றிருந்தேன். அந்த 3 மாத காலத்தில் புகார்தாரருக்கு கொடுத்த சீர்வரிசை பொருட்களை பயன்படுத்தினார்களா என்றால் பயன்படுத்தினார்கள். டி.வி.சி. வழக்குப்படி எதிரி சீர்வரிசை பொருட்களை திரும்ப ஒப்படைக்க தயாராகதான் இருந்தார் என்றாலும் புகார்தாரர்தான் அதனை பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டார் என்றால் சரியல்ல அது பழுதடைந்திருந்தது அதனால் பெற்றுக்கொள்ளவில்லை அதற்கு பதிலாக அதனை சரி செய்து கொடுத்தாலோ அல்லது புதிய பொருட்கள் வாங்கி கொடுத்தால் தயாராக உள்ளார். சீர்வரிசை பொருட்கள் எதிரியால் பயன்படுத்தப்படவில்லை என்றாலும் மனுதாரர் புகார்தாரர் எதிரியை பிரிந்து வந்த பிறகு சீர்வரிசை பொருட்கள் பயன்படுத்தாமல் இருந்ததால் அது பழுதடைந்திருக்கலாம். எதிரி புகார்தாரருக்கு மொத்த தொகையாக கொடுக்கவும் தயாராக இருந்தும் புகார்தாரர் எதிரியை அலை கழிக்கவேண்டும் என்ற எண்ணத்தில்தான் பெற்றுக்கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல.

எதிரி மனுதாரருக்கு சேரவேண்டிய சீர்வரிசை பொருட்களை திரும்ப ஒப்படைக்க இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து அது நிலுவையில் இருந்து வருகிறது என்ற விவரம் தெரியுமா என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது. அதேபோல் எதிரி தாக்கல் செய்த மேல்முறையீடு ஆரணி கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்றாலும் அந்த வழக்கில் புகார்தாரர் ஆஜராகி நடத்தி வருகிறார் என்றால் சரிதான். எதிரி புகார்தாரருக்கு சேரவேண்டிய சீர்வரிசை பொருட்களை திரும்ப ஒப்படைக்க தயாராக இருந்தும், புகார்தாரர் அதனை பெற்றுக்கொள்ளவில்லை என்றும் நான் புகார்தாரருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

// உண்மை நகல் //

Taken down by me in Open Court,
Read over to the witness and Admitted
by him/her to be correct.

Sd/-V.Arangasamy,
Judicial Magistrate,
Vandavasi.